Registered as a News Paper  பக்கங்கள்: 04  விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02  திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 02  (18 - 08 - 1991)  ஞாயிற்றுக்கிழமை  ஓசை: 181

## க.பொ.த.(சா) பரீட்சை செப். முதல் வாரத்தில்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் தடைப்பட்டுள்ள க. பொ. த சாதாரணதரப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டு கொழும்பில் தயாராகவுள்ளதாகவும், அடுத்த மாதம் முதல் வாரத்தில் பரீட்சை நடைபெறும் எனவும் யாழ். பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் சுந்தரலிங்கம் தெரிவித்தார். கடந்த வருடம் டிசம்பர் மாதம் நடை (4 ஆம் பக்கம் பார்க்க)

# ஆனையிறவுப் போரின் எதிரொலி!

# இராணுவத்தை சீரமைக்க முயற்சி!

(கொழும்பு)

ஆனையிறவு முகாமை சிறிலங்கா இராணுவம் தக்கவைத்துக் கொண்டாலும் அதிகபொருள், உயிர்ச்செலவில் நீண்டகால முயற்சியின் பின்பே அது சாத்தியப்பட்டது இந்நிலையில் எதிர்கால நடவடிக்கைகளுக்காக இராணுவத்தில் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டியது அவசியமாகவுள்ளது என கொழும்பு அரசியல், இராணுவ வட்டாரங்களில் தீவிரமாகப் பேசப்படுகின்றது.

மேலும் இராணுவ உயர் மட்டத்தில் இடம்பெற்ற ஊழல்கள் இராணுவத்தினரின் உணர்வுகளை மழுங்கடித்திருப்பதாகவும் கூறப்படுகின்றது. எனவே இராணுவத்தில் பாரிய ஒழுங்கமைப்பு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியம் எனக் கருதப்படுகின்றதாம்.

எல்லாவற்றிற்கும் மேலாக சில ஒழுங்கீனமான இராணுவத்தினர் போராட மறுத்தமை குறித்து இராணுவ வட்டாரங்கள் கவலை அடைந்துள்ளன. இராணுவத்தினரின் சகல மட்டங்களிலும் நம்பிக்கை ஏற்படுத்தப் புதிய தலைமை ஒன்றினாலேயே முடியும் என்று இராணுவ வட்டாரங்கள் கூறுகின்றன.

அதேவேளை கடந்த 17ஆம் திகதியுடன் முடிவடைந்த இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவின் பதவிக்காலம் மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது,

மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேக்கடுவவையா அல்லது மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரெட்னாவையா (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவில் 3 படை பலி; 11 பேர் படுகாயம்

(கொழும்பு)

ஆனையிறவு இராணுவமுகாமில் நடைபெற்ற விடுதலைப் புலிகளுடனான மோதலில் மூன்று சிறிலங்கா இராணுவத்தினர் உயிரிழந்ததுடன், பதினொரு இராணுவத்தினர் படுகாயமுற்றனர் என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியுள்ளன.

இச்சண்டை நேற்று முன்தினம் காலை ஒன்பது முப்பது மணியளவில் இடம்பெற்றது. இத்தாக்குதலில் ஒரு வாகனம் முற்றாகத் தீப்பற்றி எரிந்தது என்பது குறிப்பிடத்தக்கது

### நிவாரண விநியோக நிறுத்தம்:

## அரச அதிபர்களுடன்பேசியே முடிவுகள் எடுத்தோம்

(கொழும்பு)

- ரணில் விக்கிரமசிங்கா

சம்பந்தப்பட்ட பகுதிகளின் அரசாங்க அதிபர்களுடன் தீர ஆலோசித்த பின்னரே அகதி முகாம்களுக்கு வெளியே உள்ளவர்களுக்கான உலர் உணவு விநியோகத்தைநிறுத்தினோம் என அமைச்சர் ரணில்விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

கிராமோதய மண்டபத்தில் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்

அதேவேளை அத்தியாவசிய சேவைகள் மேலதிக ஆணை (4 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா இராணுவம் பிரிட்டன் வந்திருக்கலாம்

(கொழும்பு)

இவ்வளவு காலத்திற்குள் சிறிலங்கா இராணுவம் பிரிட்டனை வந்தடைந்திருக்கவேண்டும் என பிரிட்டிஷ் அவதானி ஒருவர் தெரிவித்தார்.

ஆனையிறவு முகாம் நோக்கி வெற்றிலைக்கேணி கட்டைக்காட்டுப் பகுதியில் தரையிறங்கிய இராணுவம் முன்னேறிக்கொண்டிருப்பதாக அடிக்கடி இராணுவத் தலைமைப்பீடம் அறிவித்து (4 ஆம் பக்கம் பார்க்க)

## க.பொ.த. உயர்தர மாணவர் புலமைப் பரிசில் திட்டம்

(கொழும்பு)

க பொ.த உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான புலமைப் பரிசில் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டம் முதலில் கொழும்பில் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்படும். பின்பு ஏனைய இடங்களுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளதாக கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சர் லலித் அத்துலத் முதலி தெரிவித்தார்.

### பலாலி ஆசிரியர் கலாசாலையில்

## ஆங்கில பாடநெறிக்கு மீண்டும் அனுமதி

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரியர்கலாசாலையில் பல வருடங்களின் பின் மீண்டும் ஆங்கிலம், உடற்கல்வி, கைப்பணித்துறை ஆகிய பாடநெறிகளை ஆரம்பிக்க நிர்வாகப்பிரிவு அனுமதி வழங்கியுள்ளது.

நீண்ட காலமாக பலாலி கலாசாலையில் மேற்படி பாடநெறிகள் நடைபெற்று வந்தன. 1983ஆம் ஆண்டின் பின் இவற்றை நடத்த கல்வி அமைச்சு அனுமதி மறுத்திருந்தது. இதனால் ஆங்கில ஆசிரியர் பயிற்சி பெறமுடியாத நிலை ஏற்பட்டது ஏனைய பயிற்சிகளுக்கு பேராதனை, அட்டாளைச்சேனை ஆகிய (4 ஆம் பக்கம் பார்க்க)

## கச்சதீவு ஒப்பந்தத்தை இலங்கை மீறுகின்றது

— வாழப்பாடி ராமமூர்த்தி குற்றச்சாட்டு

(திருச்சி)

கச்சதீவு தொடர்பான இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை இலங்கை அரசு மீறுவதாக இந்திரா காங்கிரஸ் தமிழ்நாட்டுக் கிளைத் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி குற்றச்சாட்டினார்.

திருச்சியில் நேற்றுச் செய்தியாளரிடம் பேசிய வாழப்பாடி ராமமூர்த்தி கச்சதீவு தொடர்பான இல (4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### சண்

### அன்பன்

கட்டைக்காட்டுப் பகுதியில் 22-07-91 அன்று நடைபெற்ற நேரடி மோதலில் எம்மவர்களான சண் (கிருஷ்ணசாமி கணேஸ், மட்டக்களப்பு) அன்பன் (முருகராசா சிறீதர் திரு (4 ஆம் பக்கம் பார்க்க)

## சிதம்பரம் தாக்கப்பட்டதற்கு காங்கிரஸ் கண்டனம்

(புதுடில்லி)

மத்திய வர்த்தக இணை அமைச்சர் திரு. ப. சிதம்பரமும் அவரது குழுவினரும் தாக்கப்பட்டதற்கு இந்திரா காங்கிரஸ் கட்சியின் செயற்குழு கண்டனம் தெரிவித்துள்ளது

பிரதமரும் இக்கட்சியின் தலைவருமான திரு பி வி. நரசிம்மராவ் தலைமையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இவ்வாறான வன்முறை நடவடிக்கைகளுக்கு இடம் கொடுக்காதவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவை இச்செயற்குழு கேட்டுள்ளது.

இதேவேளை மத்தியஅமைச் ( ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கை வங்கியை

## வெளிநாட்டுக் கம்பெனிக்கு விற்க அரசு முயற்சி

(கொழும்பு)

இலங்கை வங்கியை வெளிநாட்டுக் கம்பனிகளுக்குத் தாரைவார்த்துக் கொடுக்க அரசாங்கம்முயற்சிசெய்கிறது.

இப்போது இதற்காகக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளதாக அறிகின்றோம் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி (4 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர் மதிய உணவில் அதிகாரிகள் மோசடி -பிரேமதாசா

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களின் மதிய உணவுத்திட்டத்தின் மூலமும் ஜனசக்திதிட்டத்தின் மூலமும் பலதரப்பட்டநன்மைகளையும் அனுகூலங்களையும் அரச நிர்வாகத்தில் உள்ள சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் பெற்றுக் கொள்ள விரும்புகின்றனர் என்று ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா அறிவித்துள்ளார்.

மேலும் இவ்வாறான சட்ட விரோதமான நடவடிக்கைகளிலும் லஞ்சஊழல் நடவடிக்கைகளிலும் அரசாங்கத்திலுள்ளவர்கள் பலர் ஈடுபட்டு வருகிறனர் என்றும், இவ்வாறான ஊழல்களை ஒழித்து விடுவதற்கான வழிகாட்டல்களை தெரிவிக்கும் பொறுப்பு மதகுருமாரைச்சார்ந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான அபேட்சகர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் 1991.09.13 திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

1. புவியியல் / சமஸ்கிருதம்/ அரச அறிவியலில் உதவி விரிவுரையாளர்:

சம்பள அளவுத்திட்டம்

உதவி விரிவுரையாளர்:

ரூபா 3,900/- மாதமொன்றுக்கு (நிலையானது) (துறைத் தலைவரினாலும் / பீடாதிபதியினாலும் ஓராண்டுச் சேவையைத் திருப்திகரமாக நிறைவு செய்துள்ளாரென அத்தாட்சிப் படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) ஒருவரை விரிவுரையாளர் (தகுதிகாண்) என்ற பதவிப் பெயரில் நியமிக்கலாம் என்பதுடன் துணைவேந்தர் அவரை 4,500/- ரூபா 10x200-6500 (மாதமொன்றுக்கு) சம்பள அளவுத் திட்டத்தில் வைக்க முடியும்)

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப்படிவங்களும் இதர விபரங்களும் இப் பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் இதர விபரங்களையும் பெற விரும்புபவர்கள் 23x10 சதம மீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப் பெற்ற தபால் உறையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1991.06.09

(B/2961)

## டாக்டர்கள் பிடிபட்டனர்

(கொழும்பு)

கடமை நேரத்தின்போது வெளி ஆஸ்பத்திரிகளில் தனிப்பட்ட முறையில் கடமை ஆற்றிக் கொண்டிருந்த அநேக டாக்டர்களைச் சுகாதார அமைச்சின் திடீர் பரிசோதனைக் குழுவினர் பிடித்துள்ளனர்.

இத்தகவலைச் சுகாதார அமைச்சின் செயலாளர் ஜோ. பெர்னான்டோ தெரிவித்தார்.

## மீண்டும் பதவி

(கொழும்பு)

உள்ளூராட்சி தேர்தல்களில் போட்டியிடுவதற்கு என தமது பதவிகளை இராஜினாமாச் செய்த அரசாங்க உத்தியோகத்தர்கள் மீண்டும் தமது பதவிகளை பெற்றுக் கொள்ளலாம் என பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

இத் தேர்தல்களில் போட்டியிட்டுத் தோல்வியுற்ற உத்தியோகத்தர்களுக்கே இந்தச் சலுகை அளிக்கப்படுவதாகவும் பொது நிர்வாக அமைச்சு தெரிவித்தது.

## வெற்றிவேண்டி பிரார்த்தனை

(கிளிநொச்சி)

உருத்திரபுரத்தில் பழைமை வாய்ந்த உருத்திரேஸ்வர ஆலயத்தில்வீரமரணமடைந்த போராளிகளின் ஆத்ம சாந்திக்கும், காயப்பட்ட போராளிகள் விரைவில் குணமடையவும், களத்தில் போராடும் போராளிகளுக்கு வெற்றி வேண்டியும் கடந்த 15 நாட்களாக விஷேட ஹோமம், அபிஷேகம், பூஜை, உருத்திர அர்ச்சனை என்பன நடைபெற்றன.

இதில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டுபோராளிகளுக்காக பிரார்த்தனை செய்தனர். (63)

## கட்டணம் குறைப்பு

(பூநகரி)

கேரதீவு - சங்குப்பிட்டி படகுச்சேவை கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது அண்மையில் எரிபொருள் விலை உயர்வு காரணத்தால்கூட்டப்பட்டது. தற்பொழுது எரிபொருள் கிடைப்பதால் 17-08-91இல் இருந்து முன்பு நடைபெற்ற கட்டணமே அறவிடப்படும் என்று இறங்குதுறைப் பொறுப்பாளர் திரு.சபேசன் அவர்கள் கருத்து வெளியிட்டார். (71)

## மீனவர்கள் தொடர்பு கொள்ளவும்

(நமது நிருபர்)

உவர்நீர்க் கடலோரங்களில் இக்காலங்களில் பாலை மீன் குஞ்சுகள் காணப்படலாம் என்றும், இவ்வாறான குஞ்சுகளை உயிருடன்பிடித்து விநியோகிக்கக் கூடிய மீனவர்கள் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும்தமிழீழஆய்வுநிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது

## சைக்கிள் திருட்டுப் பிடிபட்டது

பண்டத்தரிப்பு சந்தைப்பகுதியில் சைக்கிள் திருடர் ஒருவர் கையும்மெய்யுமாகப் பிடிக்கப்பட்டுள்ளார். இவர் விசாரணைக்காக புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டார்.

கடந்த பத்துமாத காலப் பகுதியில் சுமார் 60 சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## வயோதிபர் தற்கொலை

சாவகச்சேரி கோவில் குடியிருப்பில் வயோதிபர் ஒருவர் சுருக்கிட்டு தற்கொலை செய்துள்ளார்.

நேற்று முன்தினம் அதிகாலை இவர்பணி புரியும் வீட்டிற்கு சென்றுபார்த்தஊழியர்கள் அந்த வீட்டின் பின் விறாந்தையில் தொங்கிக் கொண்டிருக்ககண்டுஊரவர்களும்இளைஞர்களும் வைத்தியசாலைக்கு எடுத்து சென்றனர். (லோ)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1991.09.13 ஆம் தேதி வரை விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

சமூக மருத்துவத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம்1/
சிரேஷ்ட விரிவுரையாளர் தரம்11.

சம்பள அளவுத்திட்டம்

1. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம்1 - ரூபா: 9,600 - 8x250-11,600/- (மாதமொன்றுக்கு)

2. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம்11 - ரூபா: 8,000 - 5x250-9,250/- (மாதமொன்றுக்கு)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக் கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களைத் தபாலில் பெற விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுயமுகவரியிட்டு ரூபா 1.50 முத்திரையொட்டப்பட்ட 23 x 10 ச. மீ. அளவுடைய கடித உறை அனுப்பப்படல் வேண்டும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும்/ அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.

- பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1991-08 12

(B/2964)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
- இலங்கை

### சித்த மருத்துவப் பிரிவிற்கு 990/91ஆம் ஆண்டிற்கான புதிய மாணவர்களை அனுமதித்தல்

மேற்குறிப்பிட்ட முன்னைய விளம்பரம் தொடர்பாக: விண்ணப்பம் யாவும் 21-09-1991 வரை ஏற்றுக் கொள்ளப்படும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

(B-2960) - பதிவாளர்

## 31-ம் நாள் நினைவஞ்சலி

வீரஜனனம் 20--10--1966



வீரமரணம் 18--07--1991

### வீரவேங்கை இலக்கியன்

### (கதிர்காமு ரவீந்திரராசா)

அரியாலை கிழக்கு

வீர மிகு வீரத்தை பெற்ற
வலுவான மாவீரனே - இலக்கியனே
நீ ஆனையிறவு பகுதியிலே சிந்திய
ஒவ்வொரு துளி இரத்தமும்
இந்த மண்ணில் ஆயிரமாயிரம்
வேங்கைகளாய் மலரக் காண்கின்றோம்
பல்லாயிரம் வேங்கைகள் உன்
பாதையில் புறப்பட்டு விட்டார்கள்
தமிழ் ஈழத்தில் என்றும் வாடாத
மலராய் நீ நிலைத்திருப்பாய்.

**இலக்கியனுக்கும் இவருடன் வீரமரணம் அடைந்த சகபோராளிகளுக்கும் எமது அஞ்சலி**

ஸ்ரீ முத்தி விநாயகர் சன சமூக நிலையம்
அரியாலை கிழக்கு,
அரியாலை.

(R/1641)

## நினைவு கூருகின்றோம்...

### 1991 - 08 - 18

1988 ஆம் ஆண்டு இதேதினத்தில் தம்பலகாமம், 98 ஆம் கிராமத்தில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

**லெப். அருள்** (சபாரத்தினம் சந்திரராசா - மேற்கு கிராமம், தம்பலகாமம்)

புதுக்குடியிருப்பில் வீரமரணமெய்திய

**கணேஷ்**

யாழ். நல்லூரில் இந்திய மத்திய றிசேவ் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பேராதனைப் பல்கலைக் கழக பொறியியல் பீட இறுதி ஆண்டு மாணவன், யாழ். புனித சம்பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர் உட்பட 3 தமிழர்கள்

1989 ஆம் ஆண்டு வீரமரணமெய்திய

**கப்டன் தரன்** (வேல்முருகு தவராசா - மட்டக்களப்பு)

கிளிநொச்சி, ஐயன்குளம் பகுதியில் விறகு வெட்டச் சென்ற போது இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஓர் இளைஞன் உட்பட 2 தமிழர்கள்

சாவகச்சேரி, நுணாவில் பகுதியில் வலிப்பு நோய் காரணமாக இரவில் மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப் படுகையில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ச் சிறுவன்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B/2943)

## பல் வைத்தியர் தேவை

எமது மருத்துவமனைக்கு பல்வைத்தியர் பதவி வெற்றிடமுள்ளது. தகைமையுடையோர் அலுவலக நேரத்தில் நேரில் சந்தித்து விண்ணப்பத்தை கையளிக்கவும் சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

அன்றும், இன்றும் என்றும்
இரவு பகல் சேவைக்கு நீங்கள் நாடும் இடம்

### வில்லியம் ஹாவே
ஞாபகார்த்த மருத்துவ மனை
17, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

(R/1647)

## சிந்தனைக்கு

ஒநாயைக் குறை கூறுவதில் ஆட்டுக்கு என்ன நன்மை? ஓநாயின் பிடியில் சிக்காமலிருக்க ஆடு கற்றுக் கொள்ள வேண்டும்.

— மகாத்மா காந்தி

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம், 18-08-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 5208
த. பெ. எண் 05

# இன அழிப்பிற்கு சிறிலங்காவில் பரிசு

யுத்தமுனையில் காயமுற்று அங்கவீனமடைந்த சிறிலங்கா இராணுவத்தினருக்கு செயற்கை அவயவங்கள் பொருத்துவதற்கென தன் கொட்டுவ சமகே ஒட்டுத் தொழிற்சாலையினர் 60,000 ரூபாவை சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சிடம் கையளித்துள்ளார்கள்.

இதே போன்று பல தனியார் நிறுவனங்களும், அரச நிறுவனங்களும் பெருமளவு அன்பளிப்புக்களைசிறிலங்கா இராணுவத்தினருக்கு வழங்கிவருகின்றன. இந்த அரச, தனியார் தொழில் நிறுவனங்களை விட சிங்கள சமூக சேவை நிறுவனங்கள் ரீதியாகவும் இவற்றிற்கு மேலாக மதநிறுவனங்களும் இந்த அன்பளிப்புக்களை வழங்குவதில் முன்னின்று செயற்பட்டு வருகின்றன.

அதேவேளை, இராணுவத்தினருக்கு தனிப்பட்ட ரீதியிலும் பலர் அன்பளிப்புக்களை வழங்கி வருகின்றனர். அண்மையில் ஆனையிறவு மோதலில் கொல்லப்பட்ட சிறிலங்கா இராணுவத்தைச்சேர்ந்த கோப்ரல் காமினி குலரெட்ன புலிகளின் வாகனம் ஒன்றை அழித்தான் எனக் கூறிப் பெருமளவு பரிசுப் பொருள்கள் அவனது குடும்பத்திற்குவழங்கப்பட்டுள்ளது. அந்தச்சிப்பாய்க்கு சிலைவைக்க வேண்டும் என்ற அளவில் ஒரு ஆக்கிரமிப்பாளன் முதன்மைப்படுத்தப்படுகின்றான்.

மேலும், சிறிலங்கா இராணுவத்தில் சேருவதற்குச் சிங்கள இளைஞர்கள் முண்டியடித்துக் கொண்டிருக்கின்றார்கள். இராணுவத்தினருக்குத் தேவையான 20,000 இளைஞர்களை ஒரு சில தினங்களில் திரட்டக் கூடிய அளவில் தமிழர் மீதான இனத்துவேசம் அவர்கள் மனதில் பதிந்துள்ளது. தமிழ் மண்ணை ஆக்கிரமிப்பதற்காக உயிரை விடவும் பேரினவாத சிந்தனையில் சிங்களவர் ஊறிப்போய் விட்டார்கள். இந்தச் சிந்தனை ஓட்டம் தனியாக இளைஞர் மத்தியில் அல்ல முதியோர் மத்தியிலும் உள்ளது தமிழ் மண்ணை ஆக்கிரமிக்கப் போராடும் சிறிலங்கா இராணுவத்தில் தனது மூன்றாவது மகனையும் இணைத்து விடும் அளவிற்குச் சிங்கள பேரினவாத சிந்தனை சிங்களப் பெற்றோர்களின் மத்தியிலும் வேரூன்றி வளர்ந்து வருகின்றது.

1988, 1989ஆம் ஆண்டுகளில் தென்னிலங்கையில் சிறிலங்கா ஆயுதப்படையினரின் செயற்பாடு பெருமளவு சிங்கள மக்களால் வெறுக்கப்பட்டது. ஜே வி பி என்ற பெயரில் 40,000மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் கொன்று குவிக்கப்பட்டதே இதற்குக்காரணமாக இருந்தது. இதைத் தொடர்ந்து கொல்லப்பட்ட அல்லது காணாமற் போன இளைஞர்களின் தாய்மார்கள், மனைவிமார்கள் ஒன்றிணைந்து பெரும் போராட்டங்களிலும் இறங்கினர். தந்தைமார் போராட்டங்களில் ஈடுபடமுடியாத அளவிற்கு இராணுவத்தின் மீதான அச்சம் இருந்தது.

ஆனால், வடக்கு - கிழக்கில் தமிழருக்கு எதிரான போர் ஆரம்பித்ததும் நிலைமை மாற்றமடைந்துள்ளது. கடந்த காலத்தைப் போன்றே சிங்கள அரசியற் கட்சிகள் உட்பட பேரினவாத சக்திகள் அனைத்தும் தமிழருக்கு எதிரான நடவடிக்கையில் ஒற்றுமையாகவும் தீவிரமாகவும் செயற்படுகின்றன. தமிழ் மக்கள் கொல்லப்படுவதையோ அன்றி பட்டினி போடப்படுவதையோ அவர்கள் கண்டு கொள்ளவில்லை. மாறாக இன அழிப்பில் தீவிரம் காட்டும் இராணுவத்தைச் சேர்ந்தவனுக்கு உயரிய பரிசுகள் வழங்கும்நிலை உருவாகியுள்ளது. இராணுவம் சிங்கள இளைஞர்களைக் கொன்றுகுவித்தது மறக்கப்பட்டு விட்டது சிங்கள இனமே பேரினவாத சக்தியாகத் திரண்டெழுந்து தமிழரை அழித்தொழிக்கமுற்பட்டுள்ளது தமிழ் மண்ணை ஆக்கிரமிப்பதில் முழுமூச்சுடன் ஈடுபட்டுள்ளது

பெரும்பான்மை இனமே இவ்வாறு தமிழருக்கெதிராகத் திரண்டெழுந்து நிற்கும் போது சிறுபான்மை இனம் தனது முழு எதிர்ப்பையும் ஒன்றுதிரட்டாவிடில் அதன் எதிர்காலம் கேள்விக்குரியதாகி விடும். ஆனையிறவுப் போரின் போது தமிழ் மக்கள் காட்டிய உணர்ச்சிபூர்வமான பங்களிப்பு தமிழ் மக்களின் விடுதலை வேட்கையை வெளிப்படுத்தியுள்ளமை உண்மைதான். ஆனால் போராட்டம் வெற்றி பெற வேண்டுமானால் இந்த எழுச்சி களம் வரை செல்ல வேண்டும் அப்பொழுதே வெற்றி நிச்சயம்.

---

### மாணவருக்கு வழிகாட்டுவது போல் ஆசிரியர்கள்

# போராட்டத்திற்கு வழி காட்டுவார்கள் என்ற நம்பிக்கையில் உள்ளோம்

-ஜொனி

(முல்லைத்தீவு)

மாணவர்களுக்கும் வழிகாட்டும் ஆசிரியர்களே போராட்டத்துக்கும் வழிகாட்டியாக இருப்பீர்கள் என்ற நம்பிக்கையில் போராடுகின்றோம். போராடவேண்டிய காலகட்டத்தில் போராட வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். போராளிகளுடைய போராட்டநிலை, அவர்களுடைய மனோநிலை அவர்களுடைய உணர்வை நீங்கள் புரிந்து கொண்டு மற்றவர்களுக்கும் புரிய வையுங்கள்.

மண்பற்று, விடுதலைப் பற்று மாணவர் மத்தியில் வளர்க்கப்பட வேண்டும். மாவீரர்கள் உடல்களுக்கு மதிப்பளித்து மரியாதை செலுத்துங்கள். போராட்ட நிகழ்வுகளில் வழிகாட்டியாகச் செயற்படுங்கள். நாட்டுக்காக, நாம் என்ன செய்தோம் என நீங்களே சிந்தித்து மற்றவர்களையும் சிந்திக்க வையுங்கள் என முல்லை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் 'ஜொனி' அவர்கள் அண்மையில் முள்ளியவளை வித்தியானந்தாக்கல்லூரியில் இடம் பெற்ற ஆசிரியர்களுக்கான போர்க்காலக் கருத்தரங்கில் மேற்கண்டவாறு கேட்டுக் கொண்டார். தொடர்ந்தும் அவர் தனது கருத்துரையில்; படியாதவர்கள் மட்டும்தான் போராளிகள்அல்ல. நன்றாகப் படித்துக் கொண்டிருக்கும் மாணவன் ஒருவன் போராட்டத்துக்கென இணைந்து விட்டால் நன்றாகப் படித்தவன்தானே இவன் புத்தி ஏன் இப்படிப்போனது என விமர்சிக்காதீர்கள். இன்றைய காலகட்டத்தில் புத்தகப் படிப்பு ஒன்றுதான் விடுதலையை பெற்றுத்தரும் என்பதல்ல.

இன்று ஒரு மாற்றம் தென்படுகிறது. 12, 14 வயது பாலகரைவிட திடகாத்திரமான இளைஞர்கள் போராட்டத்தில் இணைந்து கொள்கிறார்கள். இவர்களுள் எத்தனை ஆசிரியர்கள், ஆசிரியைகள் இன்னும் பலதரப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் எல்லாம் ஆயுதம் ஏந்திப் போராடப் புறப்பட்டுள்ளார்கள்.

இரண்டு நாட்கள் விடுதலைப் புலிகளின் காவல் தளர்ந்து விட்டால் எல்லைக் கிராம மக்கள் வெளியேறுகின்றார்கள். கோயில் புளியங்குளம், நாவலர் பாம் ஆகிய கிராமமக்கள் மருதோடைக்கு இடம் பெயர்ந்துள்ளார்கள். எல்லைக் கிராமங்களில் சிங்களவர்களின் ஊடுருவல்கள் அதிகரித்து வருவதைப் பாருங்கள்.

வரலாறு படைக்க வேண்டிய காலகட்டம் இது. பொருளாதாரத் தடை என்றும், கண்மூடித்தனமான தாக்குதல்களையும் கொடுத்து பல வழிகளிலும் தமிழ் இனத்தை அழிப்பதற்கு மும்முரமாக முனைந்திருக்கும் சிங்கள வெறியர்களின் செயற்பாடுகளை வெளிக் கொண்டு வாருங்கள். விடுதலை உணர்வு ஊட்டப்படுவது தமிழனுக்குத் தேவை. ஊக்கம் கொடுத்து புதிய சமுதாயம் படைக்க வேண்டியது உங்களது கடமை என்றும் கேட்டுக் கொண்டார்.

(56)

---

## தமிழகம் 750 ஏ. கே. 47 கோருகிறது

(சென்னை)

தமிழ்நாடு அரசு மத்திய அரசிடமிருந்து 750 ஏ. கே. 47 ரகத் துப்பாக்கிகளைக் கோரியுள்ளது. இதற்கான 1,00,000 ரவைகளையும் கேட்டுள்ளது.

தமிழ் நாட்டில் புலிகளின் நடமாட்டத்தை அடக்குவதற்காகவே துப்பாக்கிகளும் ரவைகளும் கோரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தமிழ் நாடு விசேட அதிரடிப்படைக்கு இந்த ஆயுதங்கள் கையளிக்கப்படவுள்ளன.

## சி. ஐ. ஏ க்கு 3000 கோடி டாலர்

(வாஷிங்டன்)

உலகெங்கும் உள்ள அமெரிக்காவின் மத்திய புலனாய்வு நடவடிக்கைகளுக்கு 3000 கோடி டொலர் (1,20,000 கோடி ரூபா) செலவிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காகசமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டம் அமெரிக்கப் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த நிதி ஒதுக்கீடு அடுத்தாண்டு முதல் அமுலாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## திருவனந்தவில் 21 தமிழர் கைது

(சென்னை)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 21 பேர் திருவனந்த புரத்திலுள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த சமயம் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்ட இவர்களில் இருவர் பெண்கள் என்றும், தகுந்த போக்குவரத்து ஆவணங்கள் இல்லாது இவர்கள் இருந்தபடியால் கைது செய்யப்பட்டனர் என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

## இந்திய ஹெலியைக் காணவில்லை

(பெங்களூர்)

மங்களூரில் இருந்து நேற்று முன்தினம் பிற்பகல் மூன்று பேருடன் புறப்பட்ட இந்திய கடற்படை உலங்கு வானூர்தி காணாமற் போனதாகச் சொல்லப்படுகிறது.

காணாமற் போன இந்த உலங்கு வானூர்தியைத் தேடும் பணியில் ஒரு விமானம் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பெங்களூர் விமான நிலைய வட்டாரங்கள் கூறுகின்றன

## பாக். இற்கு புதிய தளபதி

(இஸ்லாமாபாத்)

ஜெனரல் நஸீவ் நவாப் யன்யுவா பாகிஸ்தானின் 10-வது இராணுவ தளபதியாக நேற்று முன்தினம் பதவி ஏற்றார். 54 வயதான ஜெனரல் நவாப், ஜெனரல் அஸ்ஸாம் பேக்கிடமிருந்து இம் மாதம் பொறுப்பை ஏற்றார்.

---

### விடுதலைப்போரில்

# மகனையும் இணைத்து தானும் இணைந்த தாய்

(வவுனியா)

வவுனியாவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மாவட்ட அரசியல் நிர்வாகச் செயலகத்திற்கு வந்த பெண்மணி ஒருவர், தனது மகன் ஒருவரை புலிகள் அமைப்பில் இணைத்துக்கொண்டதுடன் தானும் துணைப்படையில் இணைந்து கொண்டார்.

கடந்த 11 ஆம் திகதி மேற்படி நிர்வாகச் செயலகத்திற்கு வந்த சிவசுந்தரலிங்கம் தமயந்தி என்ற குடும்பப் பெண்மணி தனது மகனான ஜெயகாந்தன் என்பவரை விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி வவுனியா மாவட்ட அரசியல் நிர்வாகப்பொறுப்பாளர் திரு. ஞானம் அவர்களிடம் ஒப்படைத்ததுடன் தானும் துணைப்படையில் சேர்ந்து கொண்டார். இவரது இன்னொரு மகன் ஏற்கனவே விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேமாதிரி புளியங்குளம் இராமனூரைச்சேர்ந்த மு. பழனியாண்டி - நிர்மலா என்ற தம்பதிகள் தமது சங்கர் என்ற மகனை, வீதியில் வைத்து அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. ஞானம் அவர்களிடம் ஒப்படைத்து புலிகள் அமைப்பில் இணைத்துக்கொண்டனர்.

வவுனியா மாவட்டத்தில் ஏராளமானவர்கள் துணைப் படையில் சேர்ந்துள்ளனர்.

இ)

## 15,000 தோட்ட தொழிலாளர் வேலை நிறுத்தம்

(கொழும்பு)

பொகவந்தலாவையிலுள்ள தேயிலைத் தோட்டத் தொழிலாளி ஒருவர் பொலிஸாரால் தாக்கப்பட்டதைக் கண்டித்து 27 தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.

இந்த வேலை நிறுத்தத்தில் பதினையாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பங்குபற்றினர். இதில் தொழிலாளியைத் தாக்கிய பொலிஸை விசாரணை செய், சித்திரவதைக்கு உள்ளாக்கிய தொழிலாளியை வைத்திய பரிசோதனை செய், இனிமேல் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறக் கூடாது போன்ற பல கோரிக்கைகள் விடுக்கப்பட்டன.

### 'தராசு' காரியாலயம்

## தாக்கப்பட்டது தொடர்பாய் சென்னையில் மூவர் கைது

(சென்னை)

'தராசு' என்ற தமிழ் வார இதழின் அலுவலகம் சென்ற புதன்கிழமை சூறையாடப்பட்டு அதன் ஊழியர் இரண்டு பேர் கொலை செய்யப்பட்டது தொடர்பாகச் சென்னையில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தைப் பார்த்துக் கொண்டு கடமையில் இருந்த நான்கு பொலிஸ்காரர்கள் கடமையில் இருந்து தவறியதற்காக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

# ஈராக் 1.6 கோடி டொலர் எண்ணெய் விற்க அனுமதி

(நியூயோர்க்)

ஈராக் உணவுப் பொருள்களையும் மனிதாபிமான உகவிப் பொருள்களையும் வாங்குவதற்கு நிதி பெறும் வகையில் வரையறுக்கப்பட்ட வகையில் எண்ணெயினை விற்பனை செய்ய அனுமதித்துள்ளதாக ஐ. நா. பாதுகாப்புச் சபை அறிவித்துள்ளது.

ஆறுமாத காலத்திற்கு மூன்று கட்டமாக 160 கோடி டொலர் மதிப்புள்ள எண்ணெயை விற்க ஈராக்கிற்கு அனுமதியளித்துள்ளதாகதெரிவித்துள்ளது.

ஆனால் எண்ணெய் விற்ற தொகை ஈராக் அரசாங்கத்திற்கு நேரடியாக செல்லாது என்றும், ஐ. நா. சபையின் தலைமைச்செயலாளர் பெரஸ் டி கெயிலரின் வங்கிக்கணக்கு மூலமாகவே செலவிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணத்தில் 30 சத வீதம் போர் பாதிப்பு ஈட்டுச் செலவினங்களுக்கும், ஈராக்கிய ஆயுதங்களை அழிப்பதற்கும் பயன்படுத்தப்படுமென்றும், மிகுதித்தொகை மக்களுக்கான உணவு விநியோகத்திற்குச் செலவிடப்படும் என்றும் அறிவித்துள்ளது.

# ஐ.நா. தீர்மானத்திற்கு ஈராக் கண்டனம்

(நியூயோர்க்)

ஈராக்கிய மக்களுக்குத் தேவையான பொருள்களை வாங்க கணிசமான பெறுமதிமிக்க எண்ணெயை விற்கும் ஐக்கிய நாடுசளின் திட்டத்தை ஈராக் கண்டித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் ஈராக்கிய தூதுவர் அப்துல் அமிர்அல் அக்பாரி மனிதாபிமான ரீதியில் அல்லாமல் ஈராக்கை ஒரு குடியேற்ற நாடாக மாற்றும் வகையில் இது அமைந்துள்ளது என்றார்.

மேலும் இத்தகைய நடவடிக்கை விசமத்தனமானது. எண்ணெயை விற்பது ஈராக்கின் உரிமை. அது ஈராக்கின் உள்நாட்டு விவகாரம் என்றும் அவர் கூறி கண்டித்துள்ளார்.

# ஆந்திர எதிர்க்கட்சிகள் ஒருவாரம் இடை நிறுத்தம்

(டில்லி)

ஆந்திரப்பிரதேச சட்டப் பேரவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முறைகேடாக நடந்து கொண்டமைக்காக அவையிலிருந்து ஒ வார காலத்திற்கு இடை நிறுத்தம் செய்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

தெலுங்கு தேசம் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்கட்சியைச் சேர்ந்தஉறுப்பினர்களே இவ்வாறு இடைநிறுத்தம் செய்து வைக்கப்பட்டுள்ளனர்.

கூச்சல் குழப்பங்களுக்கு இடையே அவை 165 நிமிடங்களுக்குப் பின்பு மீண்டும் கூடியதும் துணைச் சபாநாயகர் ஏ. தர்மராஜ் இந்த உறுப்பினர்கள் இடை நிறுத்தம் செய்யப் பட்டுள்ளதாக அறிவித்தார்.

குண்டூர் மாவட்டத்தில் சாதிக் கலவரத்தில் 21 பேர் கொல்லப்பட்டது தொடர்பாக சபாநாயகர் பதவி விலக வேண்டும் என்று இவர்கள் கோஷமிட்டுக்கொண்டே சபாநாயகரின் ஆசனத்தை நோக்கி முன்னேறினார்கள்.

மாநில முதலமைச்சர் ஜனார்த்தன் ரெட்டியின் பிரேரணைக்கு அமையவே இவர்கள் ஒருவார காலத்திற்கு இடைநிறுத்தம் செய்யப் பட்டனர்.

**சிதம்பரம்**

சர்ப.சிதம்பரம்மீதானதாக்குதலைககண்டித்தகாங்கிரஸ்கட்சி செயற்குழுக் கூட்டத்தின் தீர்மானத்தைத் தான் ஆதரிப்பதாகக் கூறினார்.

இந்த வன்முறைக்கான சூழ்நிலை தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், அனைத்துக் கட்சியினரும் இதற்கான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்

காவிரிநதி நீர்ப் பிரச்சினை மீதான மத்திய அரசின் நிலைக்கு ஆதரவாக இருக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த மத்திய அமைச்சர்களை அ. இ. அ. திராவிட முன்னேற்றக் கழகம் புறக்கணிக்க வேண்டும் என்ற முதலமைச்சரின் முடிவை விலக்கிக் கொள்ள வேண்டும் என்று தான் மீளவும் கேட்டுக்கொள்வதாக அவர் கூறினார்.

**ஆங்கில**

யகுதிகளுக்கு எமது ஆசிரியர்கள் செல்ல வேண்டி ஏற்பட்டது. இவற்றை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு யாழ். கல்விப்பணிப்பாளர் சுந்தரலிங்கம் எடுத்து விளக்கியதை அடுத்து இவற்றை இங்கு மீள ஆரமபிப்பதற்கான அனுமதியை கல்வி அமைச்சின் ஆசிரிய பயிற்சி நிர்வாகப் பிரிவு வழங்கியுள்ளது.

இதனைத் தொடர்ந்து இப் பயிற்சி 1992-ம் ஆண்டு முதல் இங்கு நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது. (ச)

# கவனிப்பாரற்ற நிலையில் திருக்கேதீஸ்வரம்

சரித்திரப் பிரசித்திபெற்ற மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயம் நீண்ட நாட்களாக கவனிப்பாரற்ற நிலையில் உள்ளது. மன்னார் மாவட்டத்தில் இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பில் உள்ள மன்னார் தீவுப்பகுதியில் வழமைநிலை ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்ட போதிலும் அங்கு இருக்கும் எந்தக் கோயிலிலும் தினமும் நடைபெறும் பூசைகள் இடம்பெற முடியாத நிலையே இருப்பதாகவும் அப்பகுதி ஆலயங்கள் பலத்த சேதமடைந்திருப்ப தாகவும் செய்திகள் கூறுகின்றன.

## கலையார்வமுள்ள ஆசிரியருக்கு அழைப்பு

யாழ். மாவட்ட மட்டத்திலான ஆசிரியர் தினப்போட்டிக்கு யாழ் கோட்ட ஆசிரியர்கள், ஆசிரியைகள், அதிபர்கள் சேர்ந்து நாடகமொன்றினை அரங்கேற்ற முனைகின்றார்கள் எனவே கலைவல்லுனர்கள், கலைஆர்வலர்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் கூடுமாறு யாழ். கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சி வேலாயுதம் கேட்டுக் கொண்டுள்ளார்

## பூசகர் தியானம்

(மன்னார்)

முளங்காவில் ஐயனார் ஆலயததில் பூசகர் ஒருவர் ஆனையிறவு யுத்தத்தில் வெற்றி வேண்டியும் நாட்டின் நலன் கருதியும் தியானம் இருந்து வருகின்றார். 45 நாட்களுக்கு நடைபெற இருக்கும் இத் தியானத்தில் முதல் 20 நாட்கள் ஒருநேர உணவும் மிகுதி 25 நாட்களும் நீர் மட்டும் அருந்தி தியானம் இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. (71)

# கல்லுண்டாய் வழியில் வழிப்பறி அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

காக்கைதீவு – கல்லுண்டாய் வழியிலான கரையோரப் பாதையில் இரவு நேரங்களில் பயணம் செய்யும் பயணிகள் மீதான வழிப்பறிக் கொள்ளையர்களின் கைவரிசை கடந்த சிலவாரங்களாக அதிகரிதுள்ளன.

நேற்று முன்தினம் மாலை ஏழேகால் மணியளவில் இப் பாதையால் பயணம் செய்து கொண்டிருந்த சயிக்கிள் பயணி ஒருவரை அதே பாதையில் சயிக்கிளில் வந்து கொண்டிருந்த ஐந்து ஆறு பேர் வழிமறித்து பயணியைத் தள்ளிவிட்டு சயிக்கிளையும் பறித்துக்கொண்டு மேற்குப் புறமாக வேகமாகச் சென்று மறைந்து விட்டனர். மேற்படி சம்பவம் காக்கைதீவுக்கு மேற்கேயுள்ள தென்னந்தோப்புப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

சயிக்கிளைப் பறிகொடுத்தவர் காரை நகரிலிருந்து அகதியாக இடம்பெயர்ந்து சுழிபுரத்தில் வசிக்கும் கடைச் சிப்பந்தியான செ. சபாரத்தினம் என்பவராவார்.

இதே பாதையில் சிலநாட்களுக்கு முன் பயணம் செய்த மோட்டார் வாகன திருத்துனர் ஒருவரை வழிமறித்த வழிப்பறிக் கொள்ளையர்கள் அவரைத் தாக்கிய பின் அவரது சயிக்கிளையும் பணத்தையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

இதுபோன்றசம்பவங்களால் இக்கரையோரப் பாதையில் இரவு நேரங்களில் பயணம் செய்ய பயணிகள் பெரிதும் அஞ்சுகின்றனர் (20)

**க. பொ. த. (சா)**

பெறாது தடைப்பட்ட மேற்படி பரீட்சை வடக்கில் விசேட பரீட்சையாக நடைபெறும் என அறிவிக்கப்பட்டது தெரிந்ததே. கடந்த 3 ஆம் திகதி ஆரம்பமாக வேண்டிய உயர்தரப் பரீட்சை ஊரடங்கு காரணமாக ஒரு சில மாவட்டங்களில் நடைபெறவில்லை. இதனால் சாதாரண தரப் பரீட்சையும் மீண்டும் பின் போடப்படுமா? என எமது நிருபர் கேட்டபோதே பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இம்மாத இறுதிக்குள் தான் கொழும்பு சென்று இப் பரீட்சைக்கான வினாத்தாள்களையும், அனுமதி அட்டைகளையும் நேரில் பெற்றுவர இருப்பதாகவும் முன்னர் அறிவிக்கப்பட்டதுபோன்று செப்டம்பர் முதல்வாரத்தில்பரீட்சைஆரம்பமாகி பத்து நாட்கள் நடைபெறும் எனவும், அதன்பின்னரே உயர்தரப் பரீட்சையை நடாத்தத் தான் தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

**அரச**

யாளர் சரித்தரத்வத்த இப்போது யாழ் குடாநாட்டுக்கு வெளியேயுள்ள பகுதிகளில் அறுவடை ஆரம்பித்துள்ளது. அப்பகுதிகளில் பணப்புழக்கமும் சீராகவுள்ளது. இவற்றை ஆராய்ந்த பின்னரே அவ்வப் பகுதிஅரசாங்கஅதிபர்களுடன் கலந்தாலோசித்து இம் முடிவு எடுக்கப்பட்டது எனத்தெரிவித்ததுடன் தற்போது நாடு முழுவதும் 461 அகதி முகாம்களில் 58,000 குடும்பங்கள் தங்கியுள்ளன எனவும் சுமார் இரண்டு இலட்சத்து ஐம்பத்தையாயிரம் பேருக்கு இப்போது உலர் உணவுப்பொருள்கள் வழங்கப்படுகின்றன என்றார்

இதேவேளை கடந்த மாதம் 31ஆம் திகதிவரை அகதி முகாம்களுக்கு வெளியே ஒரு லட்சத்து ஏழாயிரத்து எண்ணூற்று நாற்பத்துமூன்று அகதிகள் தங்கியுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்

# தமிழீழ தேசிய ஆசிரியர் ஒன்றிய பணி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ தேசிய ஆசிரியர் ஒன்றியம் நாளை முதல் தனது கல்விப்பணியினைத்தொடங்கவிருக்கின்றது.

நாளை காலை 10.00 மணிக்குயாழ் கல்வித்திணைக்களத்திற்கு அண்மையில் அமைந்துள்ள தனது செயலகத்தில் தனது பணியினை ஆரம்பிக்கின்றது இதில் பொதுச்சபைப் பிரதிநிதிகளையும், கோட்ட நிர்வாகப் பொறுப்பாளர்களையும் தவறாது கலந்து கொள்ளும்படி ஒன்றிய நிர்வாகம் கேட்டுள்ளது

## துணுக்காயில் போர்க்கால கருத்தரங்குகள்

(துணுக்காய்)

துணுக்காய் வட்ட அவைக்குட்பட்ட பகுதிகளில் போர்க்காலக் கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன.

பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்ட இக் கருத்தரங்குகளில் துணுக்காய் பிரதேச அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. வில்வம் அவர்களும் மற்றும் வட்ட அவைத் தலைவர், இணைப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தி வருகின்றனர். இக் கருத்தரங்குகளின் போது பலர் துணைப் படையில் தம்மையும் இணைத்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சந்திரசேகரனை நீதிமன்றத்தில்

# ஆஜர் செயயுமாறு மனைவி வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

கூட்டுப்படைத் தலைமைக் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள மலையக மக்கள் முன்னணித்தலைவர்பி.சந்திரசேகரனை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும்படி கோரி அவரது மனைவி சாந்தி சந்திரசேகரன் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுதொடர்பாக நீதி மன்றம் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் என்ற முறையில் பிரதமர் டி பி. விஜேதுங்க குற்றப்புலனாய்வு பணியகப் பணிப்பாளர் ஆகியோருக்கும் அழைப்பாணைவிடுத்துள்ளது.

நீதியரசர்பாரிந்த பெரேரா தே. பாலகிட்ணர் ஆகியோர் முன்னிலையில் இந்த மனு கடந்த செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இம்மாதம் 27 ஆம் திகதி வரை விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# ஆசிரியர்களை இடமாற்றம் செய்ய வேண்டாம்

## கோட்டங்களுக்கு கல்வி அதிகாரி பணிப்பு

(நல்லூர்)

01-08-91 தொடக்கம் ஆசிரிய இடமாற்றங்களை செய்ய வேண்டாம் என யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. ஆர் சுந்தாலிங்கம் சகல கோட்டக்கல்வி அதிகாரிகளையும் பணித்துள்ளார்.

தற்காலிக ஆசிரிய இடமாற்றம் பெற்று கடமையாற்றும் ஆசிரியர்களை அவர்கள் முன்னர் கடமையாற்றிய பாடசாலையில் உள்ள ஆசிரியர்களாகவே கருதவேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

மேலும் 1-8-91க்குப் பின் ஆசிரிய இடமாற்றம் தொடர்பாக எதுவித பரிந்துரைக்கடிதங்களையும் தமக்கு அனுப்பி வைக்கவேண்டாம் எனவும் அவர் அவர்களைக் கேட்டுள்ளார்.

**ஆனையிறவுப்**

புதிய இராணுவ தளபதியாக நியமிப்பது என்பதில் ஏற்பட்ட குழப்பமேஹமில்டன் வனசிங்காவிற்கு மூன்று மாத கால நீடிப்பிற்குக் காரணமாம்

மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேக்கடுவ சிறிலங்கா இராணுவத்தின் ஐந்தாவது நிலையில் உள்ளார். மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரெட்னாமுதலாவதுசிரேஷ்ட அதிகாரியாகவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**கச்சதீவு**

ங்கை - இந்திய ஒப்பந்தத்தை இலங்கை அரசு மீறுகிறது. கச்சதீவுப் பகுதியில் தமிழக மீனவர்கள் மீன் பிடிக்கவும், தொழில்செய்யப் படகுகளைப் பாவிக்கவும், வலைகளை உலர வைக்கவும் ஒப்பந்தம் இடமளிக்கிறது என்று தெரிவித்தார்.

மேலும் கச்சதீவு மீது தமிழக மீனவர்களுக்கு உரிய உரிமையைப்பெற்றுத் தர வேண்டும் என்றுகே ராமமூர்த்தி மத்திய அரசைக்கேட்டுக்கொண்டார்.

**வீரவணக்கம்**

வில், வல்வெட்டித்துறை) ஆகியோர் வீரமரணமடைந்துள்ளனர்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

**சிறிலங்கா**

வந்ததைத்தொடர்ந்து கேட்டு வந்த பிரிட்டிஷ் அவதானி ஒருவரே இவ்வாறு தெரிவித்தார் என ஏரிக்கரைப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

**வெளிநாட்டு**

எம். பி. லக்ஷ்மன் வெள்ளியன்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்

அவர் தொடர்ந்து பேசுகையில், இலங்கை ஒட்சிஜன் கம்பெனி ரூபா 160 பில்லியன் மதிப்பிடப்பட்டது. இருந்தும் அந்தக் கம்பெனி ரூபா 60 பில்லியனுக்கு வெளிநாட்டுக் கம்பெனி ஒன்றுக்கு விற்கப்பட்டுள்ளது இதன் பின்னணியில் பெரும் ஊழல்கள் நடைபெற்றுள்ளன. விற்கும் திட்டம் ஆகியவற்றின் மூலம் யாரோ பெருந்தொகையான பணத்தைக் கமிஷனாகப் பெறுகின்றார்கள் என்றார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீது, 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 ஆம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது